# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள் - 01.09.2026**

**முன்னிலை**

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 1341/SCIC/2024**

திரு.க.கோதண்டன் - புகார்தாரர்
எண்.3, திரு.வி.க.தெரு,
சோழன் நகர்
திருமுல்லைவாயில், சென்னை - 600 062.
Phone:94446 49740.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
காவல் துணை ஆணையாளர்
ஆவடி காவல் ஆணையரகம்
ஆவடி காவல் மாவட்டம்
சென்னை - 600 054.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **26.12.2023** |
| 2. | மனுதாரரின் மனு சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் | 09.01.2024 |
| 3. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 10.02.2024 |
| 4. | மனுதாரரின் புகார் மனு | 06.03.2024 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 26/12/2023 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ காவல் ஆணையர் அலுவலகம், ஆவடி, சென்னை-54 அவர்களுக்கு அனுப்பி, அதில் “04/09/2023 & 06/10/2023 - தொழிலாளர் ஆணையர்கள் ஏமாற்று மோசடி குறித்த புகார் உள்ளிட்ட 3 (மூன்று) இனங்கள் - மேற்கண்ட புகார்கள் மற்றும் கடிதங்கள் தங்கள் அலுவலகத்தில் கிடைக்கப் பெற்று தபால் பிரிவில் பதிவு செய்யப்பட்டுள்ள வரிசை எண் கொண்ட பதிவேடு ஆவணம் - இவற்றை, தகவல் பெறும் உரிமைச் சட்டம்-2005, பிரிவு 2(J)-ன் கீழ் பார்வையிடவும், கோரப்படும் ஆவணங்களை சான்றிடப்பட்டு வழங்கிடுமாறும் வேண்டுகிறேன்” எனக் கோரியுள்ளார்.

2. இன்றைய (01/09/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு.க.கோதண்டன் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 8(2)-ன்படி அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக, திரு.A. அமீர் அகமது, காவல் உதவி ஆணையாளர், பூந்தமல்லி சரகம் அவர்கள் ஆஜரானார். மனுதாரர், தான் 04/09/2023 மற்றும் 06/10/2023 தேதிகளிட்டு தொழிலாளர் ஆணையருக்கு எதிராக அளித்த புகார் மனுக்களைக் குறிப்பிட்டு அது தொடர்பான ஆவணங்களை தகவல் பெறும் உரிமைச் சட்டம்-2005, பிரிவு 2(J)-ன் கீழ் பார்வையிட்டு ஆய்வு செய்வதோடு, அதன் பின்னர், தான் கோரும் ஆவணங்களின் நகல்களை சான்றொப்பமிட்டு பெற்றுக் கொள்ளவும் அனுமதி கோரியுள்ளார் எனத் தெரிய வருகிறது. பொதுத் தகவல் அலுவலர் 10/02/2024 தேதியிட்டு பதில் அனுப்பி, அதில் மனுதாரர் குறிப்பிட்டிருக்கும் புகார் மனுக்கள் தமது அலுவலகத்தில் கிடைக்கப் பெறவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். இன்றைய விசாரணையின் போது ஆஜரான பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி அதன் பின்னர் மனுதாரர் குறிப்பிட்டுள்ள புகார் மனுக்கள் கிடைக்கப் பெற்றதாகவும், அப்புகார் மனுக்கள் காவல் ஆணையாளர் உரிய நடவடிக்கைக்காக தொடர்புடைய துறைக்கு அனுப்பப்படுவதற்காக, காவல் ஆணையாளர் அலுவலகத்திற்கு மேலனுப்பப்பட்டதாகவும் தெரிவித்தார். மனுதாரர், தனக்கு சட்டப்பிரிவு 2(J)-ன் கீழ் ஆவணங்களை / பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்ய வாய்ப்பு வழங்க என்று தெரிவித்து தான் புகார் மனு தாக்கல் செய்துள்ளதால், தனக்கு இனி தகவல் தேவையில்லை என்றும் சம்பந்தப்பட்ட அலுவலர் மீதான நடவடிக்கைதான் வேண்டும் என தனது விருப்பத்தினைத் தெரிவித்தார்.

**3. எனவே, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் Thiru.AIMAN JAMAL, I.P.S., (தற்போது மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், செங்கல்பட்டு மாவட்டம்) மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம்-2005, பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் செய்யப்பட்ட மனுவிற்கு உரிய, சரியான பதிலினை வழங்காமைக்கு பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை நேரடியாகவோ அல்லது அன்னாரின் பிரதிநிதி வாயிலாகவோ 30/09/2026 அன்று ஆணையத்தில் சமர்ப்பிக்கும்படி உத்தரவிடப்படுகிறது. மேற்கண்ட உத்தரவுகளுடன் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 1341/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
காவல் துணை ஆணையாளர்
ஆவடி காவல் ஆணையரகம்
ஆவடி காவல் மாவட்டம்
சென்னை - 600 054.

2. Thiru. AIMAN JAMAL, I.P.S.
பொதுத் தகவல் அலுவலர்
(தற்போது மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்
செங்கல்பட்டு மாவட்டம்
மாவட்டக் காவல் அலுவலகம்
செங்கல்பட்டு மாவட்டம்.

**புகார்தாரர்**

திரு.க.கோதண்டன்
எண்.3, திரு.வி.க.தெரு,
சோழன் நகர்
திருமுல்லைவாயில், சென்னை - 600 062.
Phone:94446 49740.

நகல்

1.காவல்துறை தலைமை இயக்குநர்
காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகம்
மயிலாப்பூர், சென்னை-600 004.

2.பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-600 035.

RG/Sr.PC